1990 மே 10]

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பான விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

சென்னை. சதர்ன் இரயில்வே மஸ்தூர் யூனியன், சங்க விதிகளுக்கு மாறாக செயல்படுவதாக புகார் வந்ததை அடுத்து சங்கத்தின் பதிவு 23—5-89 அன்று சென்னை, முதல் தொழிலாளர் துணை ஆணையரால் ரத்து செய்யப்பட்டு, அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்திரவை எதிர்த்து மேற்கண்ட சங்கம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டினை அடுத்து, தொழிலாளர் துறை துணை ஆணையரின் 23—5—89-ம் நாளைய உத்தரவு மறு உத்தரவு வரை உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. இதற்கிடையில் அச்சங்கம், துணை ஆணையருக்கு, ரத்து செய்யப்பட்ட சங்கத்தின் பதிவினை மீண்டும் பெறுவதற்கு முறையீடு செய்தது. இதனை பரிசீலித்த பிறகு, துணை ஆணையர் தனது 20—6—89ம் நாளைய உத்தரவில் 23—5—89 அன்று பிறப்பித்த தனது முதல் உத்திரவை தள்ளுபடி செய்து அதே பதிவு எண்ணைக் கொண்டு சங்கம் மீண்டும் செயல்பட உத்தரவு வழங்கினார். ஆனால், கடைசியாக துணை ஆணையர் 20—6—89-ல் வழங்கிய உத்தரவிற்கு எதிராக திரு. டி. முனிரத்தினம் என்பவர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து 7-9—89 அன்று துணை ஆணையரின் 20—6-89 நாளைய உத்தரவிற்கும், இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளார். எனவே, தற்போதுள்ள நிலைப்படி, உயர்நீதி மன்றத்தின் இறுதி உத்திரவு பெறப்பட்ட பின்பு தான் சங்கத்தின் சட்டப்படியான நிலை பற்றி உறுதியாகக் கூற இயலும்.

திருவள்ளுவர் சிலை

* 6838 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை தொட்டுள்ள கடலில் உள்ள பாறையில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதா? எப்போது துவங்கப்பட்டு எப்போது முடிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க் கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) தாம்பரத்தில் ஒரு பள்ளியில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அளிக்கப்படுவதாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. பி.என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இந்து மேல்நிலைப் பள்ளியில் ஆர். எஸ் எஸ். இயக்கத்தினர் சில நாட்களாக முகாம் இட்டு இருப் பதும், அங்கே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கு பயிற்சி அளிக் கப்பட்டு வருவதும் அரசுக்குத் தெரியுமா? இதன் மீது அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த செய்தியை நான் பத்திரிகையில் பார்த்தேன். அது போன்ற பயிற்சிகள் பள்ளிகளில் நடத்து வதற்கும், அரசுக்குரிய இடங்களில் நடத்துவதற்கும் அனுமதி இல்லைஎன்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதைப்பற்றி அரசின் சார்பில் உடனடியாக விசாரிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளின் காரணமாக அமைதிக்குப் பங்கம் வருவதை இந்த அரசு எந்த நேரத்திலும் தடுத்து நிறுத்தும்.